Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, APRIL 17, 2023

திங்கட்கிழமை ஏப்ரல் 17, 2023 | ஒளி: 08 கதிர் 250 | பக்கம்:05 | நகரப்பதிப்பு★ | FREE

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்



அனைத்து அரச மற்றும் அரச அங்கிகாரம் பெற்ற பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளும் இன்று (17) ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்தது.

முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகளுக்காகவே பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாடசாலைகளுக்கு முதலாம் தவணையில் முதல் கட்டத்தின் பின்னரான விடுமுறை கடந்த ஏப்ரல் 4ஆம் திகதியன்று வழங்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

தமிழர் மரபுரிமைகள் பாதுகாக்க வலியுறுத்தி

# 8 மணிநேர உண்ணாவிரதம்

## கையழுத்து வேட்டையும் முன்னெடுப்பு

தமிழர் எம் மரபுரிமைகளை பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் அடையாள உண்ணாவிரத போராட்டமும் தமிழர் தாயகம் தழுவிய கையெழுத்துப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பால் அழைப்பு விடுக்கப்பட்ட குறித்த போராட்டம் ஞாயிற்றுக்கிழமை (16) காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை யாழ்ப்பாணம் நல்லை ஆதீன முன்றலில் இடம்பெற்றது. தமிழ் மக்கள் சார்ந்த தேசிய சக்திகள், சமய சமூக தன்னார்வ அமைப்புக்கள் என பல தரப்புக்கள் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்தன.

தொடர்ச்சி P2



## நாகபூசணி அம்மனின் சிலையை அகற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நாகபூசணி அம்மனின் திருவுருவச் சிலையை அகற்றுவதற்கு காவல்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தை பிரதிபலிக்கும் வகையில், யாழில் இருந்து நயினாதீவு செல்லும் வீதியில் யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நாகபூசணி அம்மன் திருவுருவச் சிலைக்கு தமிழ் புதுவருடப் பிறப்பில் பால் அபிசேகம் உருத்திர சேனா அமைப்பினால் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2



## அன்னை பூபதியின் ஊர்திப்பவனி ஆரம்பம்



நிதர்ஷன் வினோத்

அன்னை பூபதியின் 35வது நினைவுதினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி ஊர்திப்பவனி ஆரம்பமானது.

அன்னை பூபதியின் உருவப்படம் தாங்கிய ஊர்திப்பவனி ஞாயிற்றுக்கிழமை (16)) மதியம் 1 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் நினைவிட முன்றலில் இருந்து ஆரம்பமாகியது.

தொடர்ச்சி P2

## குரங்கு பிடிக்க விசேட பயிற்சி

சீனாவிலுள்ள உயிரியல் பூங்காக்களுக்கு ஒரு இலட்சம் குரங்குகளை வழங்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், குரங்குகளைப் பிடிப்பதற்காக தூரத்திலிருந்து இயக்கக்கூடிய சிறப்பு வகை கூடுகளை அறிமுகப்படுத்தவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த கூடுகளைப் பயன்படுத்தி குரங்குளை பிடிப்பதற்காக விசேட பயற்சிகளும் வழங்கப்படவுள்ளதாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட ப்பட்டுள்ளது. பயிர்களை சேதப்படுத்தும் குரங்களை அகற்றும் பணிகளுக்கு அனைத்து விவசாய அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்தது.



தொடர்ச்சி P2

## காணாமல் ஆக்கப்பட்ட மகளை தேடிவந்த தந்தை மரணம்

சண்முகம் தவசீலன்மு

ல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகளை தேடிவந்த மற்றுமொரு தந்தை, ஞாயிற்றுக்கிழமை (16) மரணமடைந்தார்.

கந்தையா திருவா என்ற தனது மகள் 2009ஆம் ஆண்டு இறுதி



தொடர்ச்சி P2

2023இன் மூன்றரை மாதங்களில்

## அதிவேக நெடுஞ்சாலைகளில் 856 விபத்துக்கள் பதிவாகின

### புத்தாண்டு விபத்துக்களில் பாரிய சரிவு


அதிவேக நெடுஞ்சாலைகளில் 2023ஆம் ஆண்டின் முதல் மூன்றரை மாதங்களில் மொத்தம் 856 விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

தெற்கு, மத்திய மற்றும் கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைகளில் விபத்துக்கள் பதிவாகிய குறித்த விபத்துக்களில் 6 பேர் உயிரிழந்துள்ளதுடன், 14 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டு அதிவேக நெடுஞ்சாலைகளில் 1,675 வாகன விபத்துகள் பதிவாகியுள்ள நிலையில், அவற்றில் 13 பேர் பலியாகியதுடன், 25 பேர் படுகாயமடைந்தனர்.

அதிவேக நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தும் அதிகமானோர்,

தொடர்ச்சி P2



புத்தாண்டு கொண்டாட

## பாட்டியின் வீடுக்குச் சென்ற குழந்தை கால்வாயில் சடலமாக மீட்பு



தனது பெற்றோருடன் காலி, நெலுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெலவத்த, பாமன்கட பிரதேசத்தில் உள்ள தனது பாட்டியின் வீட்டுக்கு புத்தாண்டு கொண்டாடுவதற்காக சென்ற இரண்டரை வயது குழந்தை, வீட்டுக்கு அருகில் ஓடும் கால்வாயில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (16) சடலமாக மீட்கப்பட்டது. தனது மனைவி வீட்டில் இருந்த குழந்தை சனிக்கிழமை (15)

தொடர்ச்சி P2

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தால் மஹிந்த குடும்பத்துக்கே ஆபத்து

சுப்ரமணியம் பாஸ்கரன்

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமானது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அது விவாதத்துக்கு வரும் போது பெரும்பான்மை பலத்தை கொண்டிருக்கும் மஹிந்த குடும்பமே அதற்குள் சிக்கி சிறை செல்லும் நிலையேற்படலாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்

தொடர்ச்சி P2

ஜப்பானிய உதவி திட்டங்களை

## மீள ஆரம்பிக்க ஜெய்க்கா ஆவல்

ஜப்பானிய உதவியின் கீழ் இலங்கையில் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் மீள ஆரம்பிக்க ஆவலுடன் காத்திருப்பதாக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் தெற்காசிய பிராந்திய சிரேஷ்ட பிரதித் தலைவர் சச்சிகோ இமோட்டோ தெரிவித்துள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் ஆதரவு வழங்க அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் நடைபெறும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் 2023

தொடர்ச்சி P2



## நுவரெலியாவில் கோழி இறைச்சி விலை கடும் உயர்வு

ஆ.ரமேஸ்

நுவரெலியா மாவட்டத்தில் தற்போது இறைச்சி கோழிக்கு பாரிய தட்டுப்பாடு என்று கூறி ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியை 1700 ரூபாய்க்கு விற்பனை செய்து வருவதால் நுகர்வோர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் சித்திரை புத்தாண்டு ஆரம்பிக்க ஒரிரு வாரங்களுக்கு



தொடர்ச்சி P2

இளைஞருடன் ஓரிச்சேர்க்கை:

## பேக்கரி உரிமையாளர் விளக்கமறியலில்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசதத்தில் இளைஞர் ஒருவருடன் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பேக்கரி உரிமையாளரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான், சனிக்கிழமை (15) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

## பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை அச்சுறுத்தும்

இலங்கைப் பிரஜைகளின் அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள், முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மூலம் அச்சுறுத்தப்படுகின்றன என்பது தெளிவாகின்றது என்று இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் மீதான அதன் தாக்கங்கள் குறித்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் கரிசனை கொண்டுள்ளதாக ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீ லංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும், அதன் அங்கத்துவ அமைப்புகளும் மற்றும் அதனுடன் இணைந்த அமைப்புகளும் 22 மார்ச் 2023 அன்று வெளியிடப்பட்ட உத்தேச 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' தொடர்பாக ஆழந்த கரிசனை கொண்டுள்ளனர்.

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டமாகிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு (தற்காலிக விதிகள்) பதிலாக வரையப்பட்டது.

சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தில் ஊடக சமூகத்திற்குப் பொருந்தாத பல சர்ச்சைக்குரிய கூறுகள் உள்ளன என்று ஸ்தாபனம் கருதுகின்றது.

முன்மொழியப்பட்ட சட்டமூலம், "பயங்கரவாதச் செயல்கள்" என்பதன் பரந்த மற்றும் தெளிவற்ற வரையறையைக் கொண்டுள்ளது. இது கருத்துச் சுதந்திரத்தைக் குறைக்கும் விதத்தில் விளக்கம் அளிக்கப்படலாம்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 8 மணிநேர உண்ணாவிரதம்

கீழ்வரும் ஐந்து பிரதான கோரிக்கைகளை முன்வைத்தே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
# அழிக்கப்பட்ட வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் சிவலிங்கம், தெய்வ சிலைகள் உடனடியாக மீள் நிர்மாணம் செய்யப்பட வேண்டும். நீதியான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.
குருந்தூர் மலை, கன்னியா வெந்நீரூற்று ஆதி சிவன் வழிபாட்டு உரிமைகள் உடனடியாக மீள வழங்கப்படுவதுடன் புதிய பௌத்த கட்டுமானம் மற்றும் பௌத்த தொல்லியல் புதிய வர்த்தமானி இரத்து நடைமுறையில் செயற்படுத்தப்பட வேண்டும்.
இன மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தமிழர் தாயகத்தின் தொன்மங்களை, மரபுரிமைகளை மாற்றியமைக்கும் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.
மட்டு. மயிலத்தனை மடு மேய்ச்சல் தரையில் பெரும்பான்மை இன மக்களின் ஆக்கிரமிப்புக்கள் சகலதும் நிறுத்தப்பட்டு தமிழ் பண்ணையாளர்களின் மரபுரிமையான மேய்ச்சலுக்கான வாழ்வுரிமை உறுதிப்படுத்த வேண்டும்.
போருக்கு பிந்திய இன மதப்பரம்பலை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட பாரிய குடியேற்றம் உள்ளிட்ட செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து அடையாள உண்ணாநோன்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# பாடசாலைகள் இன்று ஆரம்பம்

அத்துடன், தேசிய பாடசாலைகளின் இடைநிலை வகுப்புகளுக்கான மாணவர்களை இணைத்துக் கொள்ளுதல் தொடர்பிலான புதிய சுற்றறிக்கை எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்படவுள்ளது.
எனவே இடைநிலை வகுப்புகளுக்கான அனுமதி கடிதங்கள் அமைச்சினால் வழங்கப்படாது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
தேசிய பாடசாலைகளில் தரம் 2 முதல் 4 வரையிலான இடைநிலை தரங்களுக்கும், தரம் 7 முதல் 10 வரையிலான தரங்களுக்கும் மாணவர்களை உள்வாங்குவதற்காக அமைச்சு கடிதங்கள் எதனையும் வழங்காது என்பது குறிப்பிடத்தக்கது.
இதேவேளை, இன்றையதினம் (17) அரச பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டு, அதற்கு பதிலாக வேறொரு திகதியில் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்ற செய்தியை கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த்குமார், ஞாயிற்றுக்கிழமை (16) மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அன்னை பூபதியின் ஊர்திப்பவனி ஆரம்பம்

நல்லூரில் அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களும் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தினர்.
இந்த ஊர்தியானது தமிழர் தாயகத்தை வலம்வந்து மட்டக்களப்பிலிருக்கும் அன்னை பூபதி நினைவிடத்தை சென்றடையும்.

## பாட்டியின் வீட்டுக்குச் சென்ற குழந்தை சடலமாக மீட்பு

மாலை முதல் காணாமல் போனதாக குழந்தையின் தந்தை நெலுவ பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.
காணாமல் போன குழந்தையை தேடும் பணியில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் உள்ளூர்வாசிகள் ஈடுபட்டிருந்த நிலையில், குழந்தையின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
குழந்தையின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளதாகவும் பிரேத பரிசோதனைக்கு பின்னரே குழந்தையின் இறப்புக்கான காரணம் தெரியவரும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

## குரங்கு பிடிக்க விசேட பயிற்சி

வன விலங்குகளுக்கு ஏற்படும் பாதிப்பை குறைக்கும் வகையில், அவற்றுக்கு உணவளிப்பதற்கு ஏதுவாக அனைத்து பயிர் நிலங்களிலும் அரை ஏக்கர் நிலத்தை ஒதுக்க வேண்டும் என விலங்கு நல அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.
சீனாவிலுள்ள உயிரியல் பூங்காக்களுக்கு ஒரு இலட்சம் குரங்குகளை வழங்குமாறு விடுக்கப்பட்ட யோசனை தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், தேசிய மிருகக்காட்சி சாலை திணைக்களம், விவசாய அமைச்சு மற்றும் விவசாய திணைக்களம் உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகள் இந்த குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.
இலங்கை டோக் குரங்குகளை வெளிநாட்டுக்கு வழங்குவது தொடர்பான சட்ட நிலைமைகளை ஆராய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்திருந்தார்.
இந்த குழுவில் அமைச்சு, விலங்கியல் திணைக்களம், வனவிலங்கு திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளையும் உள்ளடக்கியிருக்க வேண்டுமென அமைச்சர் குறிப்பிட்டார்.

## பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை அச்சுறுத்தும்

முன்மொழியப்பட்ட சட்டமூலத்திலுள்ள பரந்துபட்ட அதிகாரங்களினால் பேச்சு குற்றப்படுத்தலானது, பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட அல்லது ஊக்குவிக்க அல்லது தயார்ப்படுத்துவதற்கான தூண்டுதலாக புரிந்து கொள்ளப்படலாம்.
அத்துடன் அது அவர்களின் நோக்கம் அல்ல என்பதை நிரூபிக்க பிரதிவாதி மீது ஆதாரத்தின் சுமை ஏற்படுத்தப்படுகின்றது.
பிரசுரங்களை வெளியிடுபவர்கள், விநியோகிப்பவர்கள், விற்பனை செய்பவர்கள் அல்லது அனுப்புபவர்களுக்கும் இந்தக் குற்றங்கள் பொருந்துவதுடன் பயங்கரவாதச் செயல்களை ஊக்குவிக்கும் பொருட்களாகவும் மொழிபெயர்ப்பு செய்யப்படலாம்.
சட்டமூலத்தின்படி, இரகசியத் தகவல் என்பது ‘தேசிய பாதுகாப்பு / பாதுகாப்பு’ மீது ‘பாதகமான தாக்கத்தை’ ஏற்படுத்தும் எந்தத் தகவலாகவும் இருக்கலாம், அதில் ‘பொதுத் தளத்தில் இல்லாத எந்தத் தகவலும்’ அடங்கும்.
எனவே, ‘இரகசியத் தகவல்’ என்ற பரந்த மற்றும் தெளிவற்ற வகைப்படுத்தலானது, குற்றவியல் சட்டத்தின் கீழ் வரும் பல குற்றங்கள் தற்போது ‘பயங்கரவாத குற்றங்கள்’ என மறுவடிவமைக்கப்படுவதால், ஊடகத்தில் பணிபுரிபவர்கள் அவர்களின் கடமைகளை நிறைவேற்றும் போது அவர்களை ஒரு ஆபத்தான நிலைக்கு உட்படுத்தலாம்.
பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான மற்றும் ஒன்றிணைவதற்கான சுதந்திரம் மற்றும் கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்தும் சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரஜைகளின் அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளானவை முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மூலம் அச்சுறுத்தப்படுகின்றன என்பது தெளிவாகின்றது.
பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்த வேண்டியதன் அவசியத்தை ஸ்தாபனம் புரிந்து கொண்டாலும், ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையில் திருத்தங்களைச் செய்வதில் அவதானத்தையும் அது அங்கீகரிக்கின்றது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தால் மஹிந்த குடும்பத்துக்கே ஆபத்து

கிளிநொச்சியில் நேற்று (16) நடைபெற்ற கட்சியின் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின் பின்னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்
அடுத்தடுத்த வாரங்களில் மிகமிக ஆபத்தான பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு கொண்டு வரப்பட்டு நிறைவேற்றுவதற்கு பெரும்பான்மை தேவையாகும்.
இந்த நிலையில்
இப்போது பெரும்பான்மை வாக்குகளை அளிக்கக்கூடிய மஹிந்த ராஜபக்ச குடும்பமே இந்த சட்டத்துக்குள் அகப்பட்டு சிறை செல்லும் நிலை ஏற்படலாம்
ஜே.ஆர் ஜெயவர்த்தனாவினால் பாராளுமன்றத்தில் ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடை சட்டம் இன்றும் அமுலில் இருக்கின்றது.
இவ்வாறு கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தை வைத்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை கொன்று குவித்ததும் சிறைக்கும் அரசாங்கங்கள் தள்ளியுள்ளன.
தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உள்ள எதிர்கால சிந்தனை வேறு மஹிந்த ராஜபக் குடும்பத்திடம் உள்ள எதிர்கால சிந்தனைகள் வேறு அரசுக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபட்டால் இந்த சட்டத்தை பயன்படுத்த கூடிய வாய்ப்பபுக்கள் உள்ளன என்றார்.
தான் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதற்காக அனைத்து முயற்சிகளையும் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வருகின்றார் அவ்வாறான முயற்சிகளில் எந்தவோர் தேர்தலையும் தற்போது நடத்துவதற்கு அவர் தயாராக இல்லை என்றார்.
இருக்கும் பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் மிக மிக ஆபத்தான சட்டமாகவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உள்ளது. அச்சட்டமூலம் அமுல்படுத்தப்படுமாயின், தனிநபர் கருத்து சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் எதுவும் இருக்காது என்றார்.

## நுவரெலியாவில் கோழி இறைச்சி விலை கடும் உயர்வு

முன்பே கோழி இறைச்சி விலையில் மாற்றத்தை ஏற்படுத்தி வந்த விற்பனையாளர்கள் படிப்படியாக அதிகரிக்கப்பட்ட விலையினை நுகர்வோர்களுக்கு அறிமுகப்படுத்தியும் வந்தனர்.
கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர், 1080 ரூபாய் தொடக்கம் 1200 ரூபாயாக அதிகரிக்கப்பட்டு வந்த நிலையில் புது வருட காலம் அண்மித்த போது ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியின் விலையை 1500 ரூபாய் தொடக்கம் 1600 ரூபாய்க்கு விற்பணை செய்யப்பட்டது.
தற்போது இறைச்சி கோழிக்கு பாரிய தட்டுப்பாடு என்று கூறி ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியை 1700 ரூபாய்க்கு விற்பனை செய்து வருகின்றனர்.
குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா, கந்தப்பளை, இராகலை, உடப்புஸலாவ ஆகிய நகரங்களுக்கு கம்பளை, மற்றும் கண்டி, புஸ்ஸலாவை பிரதேசங்களில் காணப்படும் கோழி பண்ணைகளில் இருந்து தோல் உரிக்கப்பட்ட கோழிகள் விற்பனைக்காக கொண்டு வந்து கொடுக்கப்படுகிறது.
இருந்தபோதிலும் கோழி பண்ணையாளர்கள் கொண்டு வந்து கொடுக்கும் கோழி இறைச்சிக்காக விலையை அதிகரிக்கும் நகர் பகுதி விற்பனையாளர்கள் ஒரு கிலோவுக்கு 500 ரூபாய் இலாபம் வைத்து விற்பதாகவும் அறிய முடிகிறது.
அதேநேரத்தில் தமக்கு இறைச்சியாக்கப்பட்ட கோழிகளை கொண்டு வந்து தரும் மொத்த விற்பனையாளர்கள் விலையை குறைத்து கொடுத்தால் தாமும் விலை குறைத்து வழங்க முடியும் என நகர வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.
அதேபோலவே முட்டை விலையை அரசாங்கம் நிர்ணத்திருந்த நிலையில், ஒரு சிவப்பு நிற முட்டையின் விலையை 65 ரூபாய்க்கும், ஒரு வெள்ளை நிற முட்டையின் விலையை 55 ரூபாய்க்கும் அதிகரித்து விற்பனை செய்வதால் நுகர்வோர் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
கோழி இறைச்சி விலை தொடர்பில் மாவட்ட நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் கவனம் செலுத்தி உண்மை தன்மையை அறிந்து நுகர்வோர்களுக்கு பாதிப்பு ஏற்படாது விலை அதிகரிப்பை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க முன் வர வேண்டுமென நுகர்வோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பேக்கரி உரிமையாளர் விளக்கமறியலில்

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய பேக்கரி உரிமையாளர் தனது பேக்கரி வேலைக்காக திருகோணமலையில் இருந்து 20 வயதான இளைஞன் ஒருவரை அழைத்து தனது விடுதியில் தங்கவைத்துள்ளார்.
இந்த நிலையில் சம்பவதினமான வெள்ளிக்கிழமை இரவு அந்தபகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் அவரின் நடத்தையை அவதானித்து, 119 பொலிஸ் அவசர பிரிவுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.
இதையடுத்து குறித்த



விடுதியையை சுற்றிவளைத்த பொலிஸார், பக்கரி உரிமையாளரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்ததுடன் இளைஞனை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.
இதில் கைது செய்யப்பட்ட நபரை மட்டக்களப்பு நீதவான் நீதி மன்ற நீதவான் முன்னிலை யில் சனிக்கழமை (15) ஆஜர்படுத்தியபோது அவரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## நாகபூசணி அம்மனின் சிலையை அகற்ற நடவடிக்கை

இந்த நிலையில் சனிக்கிழமை (15) யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்ட உருத்திர சேனா அமைப்பின் பிரதிநிதிகள் 3 மணிநேரம் தீவிர விசாரணக்கு உட்படுத்தப்பட்டனர்.
உருவச் சிலையை அமைத்தவர்கள் தொடர்பில் தமக்கு தகவல் தெரியாது என்றும் தாம் பால் அபிசேகம் செய்ததாகவும் உருத்திர சேனா அமைப்பினர், பொலிஸாரின் விசாரணையின் போது தெரிவித்துள்ளனர்.
இந்தநிலையில் எந்தவோர் அனுமதியுமின்றி அமைக்கப்பட்ட நாகபூசணி அம்மனின் சிலையை அகற்ற தீவிர நடவடிக்கையில் யாழ்ப்பாணம் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## அதிவேக நெடுஞ்சாலைகளில் 856 விபத்துக்கள் பதிவாகின

சாரதிகளுக்கு தமது வாகனங்களைப் பற்றிய சரியான அறிவு இல்லாதது மற்றும் கவனக்குறைவாக வாகனம் செலுத்துவதே விபத்துக்களின் அதிகரிப்புக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை, சனிக்கிழமை (15) மாலை 6 மணி வரையான 32 மணி நேர காலப்பகுதிக்குள் விபத்துக்குள்ளான 200 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இவர்களில் 78 பேர் வெள்ளிக்கிழமை விபத்திற்குள்ளாகியுள்ளதாகவும் குறித்த காலப்பகுதியில் தீ விபத்துக்குள்ளான ஒருவர் மாத்திரமே இதுவரை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.
புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது, பட்டாசு கொளுத்துவதால் ஏற்படும் விபத்துகள் குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்துள்ளதாக தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் குமார விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## காணாமல் ஆக்கப்பட்ட மகளை தேடிவந்த தந்தை மரணம்

யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்ட நிலையில், இந்த தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த கணபதி கந்தையா என்பவரே உயிரிழந்தார்.
இறுதி யுத்தத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட, இறுதி யுத்தம் நிறைவடைந்த பின்னர் இராணுவத்திடம் ஒப்படைத்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடி போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.
கடந்த 2009 இறுதி யுத்தம் நிறைவடைந்த காலம் முதல் தேடிவரும் உறவுகள் கடந்த 2017ஆம் ஆண்டு முதல் வடக்கு கிழக்கு எங்கும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2017 மார்ச் 8ஆம் திகதியன்று ஆரம்பித்த தொடர் போராட்டமானது ஆறு ஆண்டுகளை கடந்து ஏழாவது ஆண்டாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
அந்தவகையில், பல நூற்றுக்கணக்கானவர்கள் தமது உறவுகளுக்கான நீதி கிடைக்கப்பெறாமலேயே உயிரிழந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மீள ஆரம்பிக்க ஜெய்க்கா ஆவல்

ஆம் ஆண்டுக்கான வசந்த கால கூட்டத் தொடர் கடந்த 10ஆம் திகதி ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை (16) வரை இடம்பெற்றது.
அந்த கூட்டத் தொடரில் இலங்கை தனது கடனை மறுசீரமைப்பதிலும் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.
நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தலைமையிலான குழுவொன்று வொஷிங்டனில் இடம்பெற்ற கூட்டங்களில் கலந்துகொண்ட நிலையில் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான கூட்டங்களில் இலங்கைக்கு இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வாரம் என்று இராஜாங்க அமைச்சர் ஷெஹான் கூறினார்.
இலங்கையின் முன்னுரிமைகள் மற்றும் பொருளாதார மீட்சி மற்றும் கடனை நிலைநிறுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள முன்னேற்றத்தை மேலும் மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து உலகத் தலைவர்களுடன் இலங்கை பிரதிநிதிகள் கலந்துரையாடலில் ஈடுபட்டதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

வீதியில் பயணித்த தாய், மகள் மீது

# வாளால் தாக்குதல் நடத்தி நகைகளும் அபகரிப்பு

■ க. அகரன்

வவுனியா, பம்பைமடு பகுதியில் வீதியில் சென்றுக்கொண்டிருந்த தாய் மற்றும் மகள் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், அவர்கள் அணிந்திருந்த நகைகள் மற்றும் பணம் என்பனவும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை (15) இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் வசிக்கும் தாயும், எட்டு மாத கர்ப்பிணியான அவரது மகளும் புத்தாண்டு தினத்தன்று (14) மோட்டர் சைக்கிளில் வவுனியா நகரில் இருந்து பூவரசன்குளம் நோக்கி சென்றுள்ளனர்.

இரவு 8.30 மணியளவில் பம்பைமடு பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது அப் பகுதியில் அமைந்துள்ள வவுனியா பல்கலைக்கழகத்திற்கும், பம்பைமடு இராணுவ முகாமுக்கும் இடைப்பட்ட சிறிய பற்றைக் காட்டுக்குள் இருந்து முகங்களை துணித் துண்டுகளால் மூடி கட்டியவாறு வந்த மூவர் குறித்த மோட்டர் சைக்கிளை வழிமறித்து அவர்கள் மீது வாளால் வெட்டி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அத்துடன், அவர்கள் அணிந்திருந்த சங்கிலி, காப்பு, மோதிரம் உள்ளிட்ட 6 அரைப் பவுண் நகைகளை கொள்ளையடித்துள்ளதுடன், அவர்களது பையில் இருந்த ஒன்றரை இலட்சம் ரூபாய் பணம் மற்றும் தொலைபேசிகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த பூவரசன்குளம் பகுதியைச் சேர்ந்த தாய் மற்றும் 8 மாத கர்ப்பிணி பெண் ஆகிய இருவரும் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## மீனவரின் சடலம் மீட்பு



■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு, ஏறாவூர் மையலம்பாவெளி வாவியிலிருந்து மீனவர் ஒருவரின் சடலத்தை ஞாயிற்றுக்கிழமை (16) மீட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் உடனடியாக வாவிக்குச் சென்ற பொலிஸ் பரிசோதகர் வை. விஜயராஜா மற்றும் ஏறாவூர் பொலிஸ் நிலைய நிருவாகப் பொறுப்பதிகாரி எஸ்.எல். சறூக் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மீனவர்களின் உதவியோடு வாவியில் மிதந்து கொண்டிருந்த சடலத்தை மீட்டனர்.

கை கால்களற்று உருக்குலைந்து பொருமிய நிலையில் மீனவரின் சடலம் வாவியிலிருந்து மீட்கப்பட்டது. முதலை கடித்துக் குதறியதனால் சடலம் கை கால்களற்ற நிலையில் உருக்குலைந்திருப்பதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

சடலம் மட்டக்களப்பு ஈச்சந்தீவு நாவற்காட்டைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய அமரசிங்களம் ஜெயச்சந்திரனுடையது என உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

## நிர்வாக தெரிவுக்கூட்டம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

ஓட்டமாவடி தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்துக்கான புதிய நிர்வாக சபையை தெரிவு செய்யும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

107 ஆவது அகவையில் கால் பதித்துள்ள பாடசாலை பல்வேறு வரலாற்றுச் சாதனைகளை படைத்துள்ளன. இவ்வாறு சாதனைகளை நிலைநாட்டி வரும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகத் தெரிவு எதிர்வரும் 29 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே, குறித்த கூட்டத்தில் சகல பழைய மாணவர்களும் கலந்து கொள்ளுமாறு அதிபர் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## காணி உறுதிப்பத்திரங்களை பெறுவதற்கு துரித நடவடிக்கை



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் பிராந்திய ஆயுர்வேதப்பிரிவின் முயற்சியின் காரணமாக பாண்டிருப்பு மற்றும் பெரிய நீலாவனை மத்திய ஆயுர்வேத மருந்துகங்களுக்குரிய காணி உறுதிப்பத்திரங்கள் பெறப்பட்டுள்ளன.

குறித்த காணி உறுதிப்பத்திரங்களை பெறுவதற்கு கல்முனை பிரதேச செயலகம் துரிதமாக செயற்பட்டமைக்காகவும் தொடர்ந்தேர்ச்சியான முயற்சிகளை மெற்கொண்டமைக்காக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் அவர்களுக்கும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் டாக்டர் ஆர்.ஸ்ரீதர் விசேட நன்றிகளைத் தெரிவித்தார்.

இக்காணி உறுதிப்பத்திரங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சிறீதர், பணிமனை சார்பில் பிரதி பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ வாஜித், கல்முனைப்பிராந்திய ஆயுர்வேதப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.நபீல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 10 நாட்களுக்குள் மூவர் ரயில்களில் மோதி பலி

■ ஜவ்பர்கான்

மட்டக்களப்பு புகையிரத நிலையத்தை அண்மித்த பகுதியில் ரயிலில் மோதி குடும்பஸ்தர் ஒருவர், சனிக்கிழமை (15) இரவும் பலியாகியுள்ளார்.

மட்டக்களப்பிலிருந்து அன்றிரவு 8.15 மணிக்கு கொழும்பு நோக்கி புறப்பட்ட கடுகதி ரயில் மோதியே பலியாகியிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மரணித்தவர் சத்துருகொண்டான், பாடசாலை வீதியை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான இராமசாமி ரமேஷ்காந் (44) என அவரது மனைவி மற்றும் சகோதரி ஆகியோர் அடையாளம் காட்டினர்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி வெள்ளிக்கிழமை (14) அதிகாலை 1.35 புறப்பட்டுச் சென்ற ரயிலில் பயணித்தவர்களே குறித்த சடலத்தை கண்ணுற்று அறிவித்ததைத் தொடர்ந்தே சடலம் மீட்கப்பட்டது.

இதேவேளை, ஏப்ரல் 3ஆம் திகதியும், 11ஆம் திகதியும் ரயிலில் மோதுண்டு இருவர் மரணமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மூச்சு திணறி சிசு உயிரிழப்பு

■ செ.தி.பெருமாள்

மஸ்கெலியா, காட்டு மஸ்கெலியா தோட்டத்தில், ஐந்து மாத சிசு பால் குடித்து கொண்டிருந்த போது, மூச்சுத் திணறல் ஏற்பட்டு மரணமடைந்துள்ளது.

அச்சிசுவை அவசரமாக மஸ்கெலியா வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றபோது, ஏற்கெனவே சிசு இறந்துவிட்டதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

14ஆம் திகதி இடம்பெற்ற இந்த சம்பவத்தை அடுத்து, உடற்கூற்று பரிசோதனைகள் அன்றையதினம் கிளங்கள் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு, தோட்ட மையானத்தில் அன்று மாலையே புதைக்கப்பட்டது.

## டெங்கில் இருந்து காக்க புZZZகை விசிறும் நடவடிக்கை



டெங்கு காய்ச்சலில் இருந்து மக்களை பாதுகாக்க களச் செயற்பாடுகளும் புகை விசிறும் நடவடிக்கையும் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசங்களில் அண்மையில் மேற்கொள்ளப்பட்டன.

டெங்கு நுளம்பின் ஆதிக்கம் சமிக்கை காட்டி வருகின்றதை அவதானிக்க கூடியதாக இருப்பதனால் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக டெங்கு கட்டுப்பாட்டு கள ஊழியர்களால் நாளாந்தம் களச் செயற்பாடுகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. இதன் தொடர்ச்சியாக கல்முனை மாநகர சபை புகை விசிறல் இயந்திரங்களின் உதவியுடன் டெங்கை கட்டுப்படுத்தும் முகமாக அதனை பரப்பும் முதிர்ந்த நுளம்புகளை அழிக்கும் புகை விசுறும் (Fogging) விசேட நடவடிக்கைகள் பொதுச்சுகாதார பரிசோதர்களான கலந்தர்ஷா ஜெமீல், எம்.எம். முஹம்மட் சப்னூஸ், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களின் பங்கெடுப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

ஆட்கொள்ளியான டெங்கு நோய் ஊடுருவி நம்மை வந்தடைந்து மரண அச்சுறுத்தலை வழங்குவதுடன் குழந்தைகளையும், சிறுவர்களையும், மாணவர்களையும் மிகவும் அதிகமாக பாதித்து டெங்கு காய்ச்சல் ஏற்பட்டு உயிராபத்தை உண்டாக்கிவிடும் அபாயம் நிலவுகிறது. ஆகவே சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் நீர்த் தேங்கி நின்று அதனில் நுளம்புகள் உருவாவதற்கு ஏதுவான பொருட்களையும் இடங்களையும் இல்லாதொழிக்குமாறும் சுகாதாரத்துறை மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

## எலி காய்ச்சலால் தாய் மரணம்

மொனராகலை, போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வந்த இரண்டு பிள்ளைகளின் தாயொருவர், எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் மரணமடைந்துள்ளார். இந்நிலையில், எலிக்காய்ச்சல் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டுமென சுகாதார துறையின் கேட்டுக்கொண்டுள்ளனர்.



### கதிர்காமத்தில்...

தமிழ்–சிங்கள புத்தாண்டு அன்று, கதிர்காமத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. இதில் நாடளாவிய ரீதியில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றிருந்தனர். வடக்கு,கிழக்கில் இருந்து பெருந்திரளான பக்தர்கள் வருகைதந்திருந்தமை விசேட அம்சங்களில் ஒன்றாகும். (சுமணசிறி குணத்திலக்க)

## 14 வீடுகளின் கூரைகளை அள்ளிய மினி சூறாவளி

■ துவாரகஷான்

நுவரெலியா, லிந்துலை பெசிபன் தோட்டத்தில் வீசிய மினி சூறாவளி காரணமாக 14 வீடுகளில் கூரை தகடுகள் அள்ளுண்டு போய்யுள்ளன. இதனால், 74 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

திடீரென மழையில்லாத போது மினி சூறாவளி, சனிக்கிழமை (15) வீசியுள்ளது. இதனால், தகரங்கள் மற்றும் ஏனைய பொருட்களும் தூர இடங்களுக்கு அள்ளுண்டு சென்றதாக மக்கள் குறிப்பிட்டனர். இருவருக்கு சிறிய காயங்களும் ஏற்பட்டுள்ளன.

**“ ஆலங்கட்டி மழை பெய்ததால், மரக்கறிகள் பெருமளவில் சேதமடைந்தன. பாரியளவில் பயிர்செய்த விவசாயிகள் நெருக்கடியான நிலையில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்**

மினி சூறாவளியினால், மின்சார கம்பங்கள், கம்பிகள் சேதமாகியதால் இரண்டு மணி நேரம் மின்சாரமும் அன்றையதினம் துண்டிக்கப்பட்டு இருந்தது. பாதிக்கப்பட்ட வீடுகளைச் சேர்ந்த மக்கள் உறவினர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தோட்ட நிர்வாகம் தேவையான நிவாரண உதவிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதோடு சேதமடைந்த வீடுகளின் கூரைத்தகடுகளை புனரமைத்து தருவதாக தோட்ட முகாமையாளர் மக்களிடம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டொரிங்டன் பிரதேசத்தில், அன்றையதினம் மாலை 3 மணியளவில் ஆலங்கட்டி மழை பெய்ததால், மரக்கறிகள் பெருமளவில் சேதமடைந்தன. அத்துடன், தாங்கள் நஷ்டத்தை எதிர்கொண்டதாக விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.



# விழிப்பாய் இருந்து அனர்த்தங்களை தவிர்த்துக்கொள்ள முயல்வோம்

பிறந்திருக்கும் தமிழ்-சிங்கள புத்தாண்டில், பலரும், தூரநோக்குடன் சிந்தித்து எதிர்காலத்தை திட்டமிட்டு உறுதிபூண்டு கொண்டிருப்பர். இன்னும் சிலர், உறுதிபூண்ட மறுநிமிடமே அதை மறந்து தீய பழக்கங்களை முதலில் இருந்து ஆரம்பித்து வழக்கமாக்கிக்கொள்வர். இன்று மட்டுமென சத்தியம் செய்தவர்கள், தீய பழக்கங்களை வழக்கமாக்கிக் கொள்வர்.

புத்தாண்டுப் பிறப்புக்கு முன்னரும் புத்தாண்டு பிறப்புக்குப் பின்னரான கடந்த இரண்டொரு நாட்களும் ஏற்பட்ட விபத்துக்கள், அனர்த்தங்கள் மற்றும் ஏனைய அசம்பாவிதங்களை, கடந்த புத்தாண்டு பிறப்புகளின் போது ஒப்பிடுகையில் ஓரளவுக்கு குறைவாகதான் இருக்கின்றது.

ஆக, 'சோபகிருது' வருடம் மங்கலமாகவே பிறந்து இருக்கிறது. அந்த மங்கலம் அடுத்த வருடப்பிறப்பு வரை நீடித்து நிலைக்கும் வகையில் சிந்தித்து செயலாற்றவேண்டும்.

எனினும், நீரில் மூழ்கி பலியானமை, மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தி உயிர்களுக்கு உலை வைத்தமை, போதையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதால் ஏற்பட்ட மரணங்கள், பழைய பகையை தீர்த்துக்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் இடம்பெற்ற மரணங்களின் எண்ணிக்கை ஓரளவுக்கு அதிகரித்துள்ளன.

பட்டாசு வெடித்தல், சக்கரத்தை பற்றவைத்தல், மத்தாப்புக்களைக் கொளுத்துதல், உள்ளிட்ட சம்பவங்களால் ஏற்பட்ட விபத்துக்களும் ஓரளவுக்கு குறைந்துள்ளன. பொதுவாக சொல்வதாயின், பட்டாசு உள்ளிட்ட வான வேடிக்கை கொள்வனவு இவ்வருட பிறப்பில் குறைந்துள்ளது. இதனால், பட்டாசு வெடித்ததால் ஏற்பட்ட காயங்கள் மற்றும் கண் பாதிப்பு உள்ளிட்டவை குறைந்துள்ளன.

அதேபோல, குடும்ப வன்முறைகளும் குறைந்துள்ளன. நீண்ட விடுமுறை என்பதால், புத்தாண்டை நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் கழிக்கவேண்டும் என முன்கூட்டியே திட்டமிட்டுக்கொண்டு, வெளிமாவட்டங்களுக்கு குடும்பம், குடும்பங்களாக சென்றுவிட்டனர். முக்கியமான மதவழிபாட்டுத் தலங்களிலும் சனநெரிசலைக் காணக்கூடியதாக இருந்தது.

இதேநேரத்தில், தங்களுடைய கிராமங்களுக்கும், தோட்டங்களுக்கு, வெளியிடங்களுக்கு சென்றிருந்த பலரும் பெறுமதியான பொருட்களை இழந்து நிர்க்கதியாகி இருந்தனர். அவ்வாறானவர்களுக்கு இந்த புத்தாண்டு சோகமானதாக இருந்திருக்கும் என்படன் அடுத்தடுத்த காலங்களில் ஒரு படிப்பினையைக் கற்றுத்தந்திருக்கும்.

பல மாதங்களை உழைத்து, சம்பளத்தையும், ஏனைய கொடுப்பனவுகளையும் வாங்கிக்கொண்டு வீட்டுக்கு, மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினருடன் அதுவும் புத்தாண்டை கொண்டாடுவதற்காக சென்றுகொண்டிருந்த ஒருவர், தன்னுடைய முழு பணத்தையும் பறிகொடுத்தமையால் தனது உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் பெரும் சோகமானது.

கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை பாதுகாத்துக் கொள்ள முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். ஏனெனில், வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதருவோரின் பெறுமதியான பொருட்கள் மற்றும் பணத்தை இலாவகமாக அபகரித்து, சந்தோஷமடைவதற்கு ஒருசில குழுக்கள் திட்டமிட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன.

சிக்கிக்கொள்ளும் வகையில் முடிச்சுமாறிகள் கையை வைக்கமாட்டார்கள் என்பதை விளங்கிக்கொண்டு, விழிப்பாக இருப்பதே புத்திசாலித்தனமாகும் என்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள் www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

தங்களுக்குப் பிடித்தவர்களைவிட, தங்களுக்குப் பிடிக்காதவர்கள் பற்றியே மனிதர்கள் பெரும்பாலும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். திரைப்படங்களில் கதாநாயகனுக்கு கிடைக்கும் முக்கியத்துவம், வில்லனுக்கும் கிடைக்கும்; வில்லன், வில்லி இல்லாதுவிட்டால், கதைகளில் சுவாரஸ்யம் இருக்காது.

ஆனால், அநேகர் வில்லன்களை விரும்புவதுபோல, விரும்பாத மனிதர்களையே விமர்சனம் செய்வார்கள். ஆனால், இவர்கள் சொல்வதைப்போல், இவர்கள் குறிப்பிடும் நபர், அவர் போல் ஏசிக்கொண்டே இருக்மாட்டார். நேரத்தைதச் செலவழிக்களவரையாவது திட்டுவதே சுவாரஷ்யமானது என எண்ணக்கூடும். பல ஆண், பெண்கள் கூடினால், பக்கத்துவீட்டுக்காரர்களின் பிரச்சினையையே ஆராய்வார்கள். இது ஒரு வன்முறை போன்றது.

ஒருவர் விடும் பிழைகளை நேரடியாகச் சுட்டிக்காட்டாமல், மறைமுகமாக அவரை வைது கொள்வது பிழையான அணுகுமுறையாகும். இதனால் என்ன லாபம்?

அதனை விடுத்து யாவரையும் எபாராட்டி மகிழ்க! இதயம் இதனால் சுத்தமாகும். நல்லவற்றை மட்டும் பேசுக!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## இலங்கையின் பெரும் சாபக்கேடு

# தீர்க்கதரிசனமுள்ள அரசியல்வாதிகள் இல்லாமை



என்.கே.அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

1965 இல் சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்ததைத் தொடர்ந்து, லீ குவான் யூ சிங்கப்பூர் என்ற குட்டித் தீவுத் தேசத்தை நிறுவும் பணியைத் தொடங்கினார். ஒரே ஒரு தலைமுறையில், லீ குவான் யூ, அந்தக் குட்டித் தீவின் மக்களை மக்களை ஒன்று திரட்டி, ஆயுதப் படைகளை வலுப்படுத்தவும், உள்கட்டமைப்பை விரிவுபடுத்தவும், குடியேறியவர்களை அவர்களின் பூர்வீகம் பொருட்படுத்தாமல் வரவேற்கவும் தனது அமைச்சரவை கூட்டாளிகளை வழிநடத்துவதன் மூலம் சிங்கப்பூரை "மூன்றாம் உலக" நாட்டிலிருந்து "முதல் உலக" உலகளாவிய பெருநகரமாக மாற்றினார்.

இன்று உலகளவின் தனிநபர் தலா வருமானம் உயர்ந்த முதல் ஐந்து நாடுகளுக்குள் சிங்கப்பூர் இருக்கிறது. மலேசியாவினால் வேண்டாம் என்று ஒதுக்கப்பட்ட ஒரு குட்டித் தீவை, பொருளாதார, மற்றும் சமூக ரீதியாக வளர்ந்த நாடாக மாற்றியது லீ குவான் யூவின் சாதனை. அதனால் அவர் சிங்கப்பூரின் "ஸ்தாபக தந்தை" என்று பரவலாக அங்கிகரிக்கப்பட்டார்.

சிங்கப்பூரைக் கட்டியெழுப்புவதில் அவர் பெற்ற வெற்றி, வரலாற்றில் இருந்து பாடம் கற்று, பல்லின மற்றும் பன்மொழி அரசை உருவாக்கும் திறனில் வேரூன்றி இருந்தது. சிங்கப்பூர் அடைந்த பெரும் வளர்ச்சி, மலேசியாவில் சாத்தியப்படவில்லை. அங்கு பேரம்பான்மை மலாய் மக்கள் தங்கள் தேசத்தில் குறைந்த எண்ணிக்கையிலான சீனர்கள் மற்றும் பிற சிறுபான்மையினரை மட்டுமே சேர்க்க வேண்டும் என்று விரும்பினர்.

இது மலேசியாவுக்குள் இன ரீதியான கொதிப்பு நிலைகள் உருவாகக் காரணமானது. லீ இதனை நன்கு அவதானித்திருந்தார். லீ சிங்கப்பூருக்கான புதிய அரசாங்கக் கட்டமைப்பை மாற்றியமைக்க நினைத்தார். சிங்கப்பூரை அவர் ஒரு பல்லின மற்றும் பன்மொழி மாநிலத்தின் அடித்தளத்தில் கட்டினார். அவரது புதுமையான நிர்வாகம் மற்றும் ஆட்சி அணுகுமுறை சிங்கப்பூர் செழிக்கவும், 20 ஆம் நூற்றாண்டின் மிக வெற்றிகரமான வளர்ச்சிக் கதையாக மாறவும் காரணமானது. லீயின் சிந்தனை, "லீ குவான் யூ: த மான் அண்ட் ஹிஸ் ஐடியாஸ்" என்ற புத்தகத்தில் தெளிவாகப் பிரதிபலிக்கிறது. இது சிங்கப்பூரின் சவால்களைத் தீர்ப்பதற்கான அவரது மூன்று-பகுதி அணுகுமுறையை கோடிட்டுக் காட்டுகிறது: தடையை கண்டறிதல், தீர்வை முன்வைத்தல் மற்றும் சமூகம் வளர என்ன தேவை என்பதை மதிப்பீடு செய்தல். சிங்கப்பூர் மற்றும் உலகிற்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும் எதிர்காலத்தின் படத்தை அவர் விட்டுச் சென்றார். ஒரு தீர்க்க தரிசனமுள்ள தலைமை கிடைத்தது சிங்கப்பூர் என்ற குட்டித் தீவுக்குக் கிடைத்த பெரும் வரம்.

சீனர்கள், மலாயர்கள், இந்தியர்கள் என பல்லினங்கள் நிறைந்த, அதேவேளை சீனர்களை 70%-ற்கு அதிகமாகக் கொண்ட தீவை, சீன இனத்தை சார்ந்த லீ குவான் யூ நினைத்திருந்தால், சீன இனத் தேசியவாதத்தை முன்னிறுத்தி அரசியல் செய்து ஆட்சியைத் தக்கவைத்தும் இருந்திருக்கலாம். ஆனால் சிங்கப்பூர் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்காது. இலங்கையைப் போல இனப்பிரச்சினையில் சிக்கி சீரழிந்திருக்கும். இந்த விஷயத்தில் லீ குவான் யூ தெளிவாக இருந்தார்.

பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதற்கான எளிதான வழி எங்களுக்கு வாக்களியுங்கள் நாங்கள் சீனர்கள், அவர்கள் இந்தியர்கள், அவர்கள் மலாய்க்காரர்கள் என்று சொல்வது. அப்படிச் செய்தால் எங்கள் சமூகம் பிளவுபடும் என்று லீ குவான் யூ பகிரங்கமாகவே கூறினார். "உங்களிடம் ஒற்றுமை இல்லையென்றால். ஒரு சமுதாயமாக உங்களால் முன்னேற முடியாது" என்பது லீ குவான் யூ சொன்ன செய்தி. எத்தனை உயர்ந்த தீர்க்கதரிசனம்! இந்த விடயத்தில் விட்டுக்கொடுப்பிற்கே இடமில்லை என்பதில் லீ பிடிவாதமாக இருந்தார். "இனம், மொழி, மதம் ஆகிய அட்டைகளைக் காட்டி விளையாட வேண்டாம். நாங்கள் இவ்வளவு தூரம் வந்துவிட்டோம், நாங்கள் ஒற்றுமையாகிவிட்டோம், அதை அப்படியே வைத்திருங்கள்" என்பது சிங்கப்பூர் மக்களுக்கு லீ குவான் யூ சொல்லிச் சென்ற செய்தி.

லீ குவான் யூவின் தீர்க்கதரிசனம் என்பது இந்த இனங்கள் சார்ந்த விடயத்தைத் தாண்டி, சிங்கப்பூர் என்ற எந்த இயற்கை வளங்களுமற்ற குட்டித் தீவை பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இன்று உலகளவின் தனிநபர் தலா வருமானம் உயர்ந்த முதல் ஐந்து நாடுகளுக்குள் சிங்கப்பூர் இருக்கிறது என்றால் அதற்கு லீ குவான் யூ எடுத்துக்கொண்ட பொருளாதார அணுகுமுறைதான் அடிப்படைக் காரணம். கம்யுனிசம், சோஷலிசம், மூடிய பொருளாதாரம் பேசி மக்களை ஏமாற்றும் பணியை லீ செய்யவில்லை. சர்வதேச வணிகத்தை ஏதோவொரு ஆபத்தான பொருளாக லீ கருதவில்லை. ஆனால் சிங்கப்பூரின் நிதியையும், வணிகத்தையும் பாதுகாப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் அவர் எடுத்தார்.

சிங்கப்பூர் டொலரின் சர்வதேசமயமாக்கலைத் தடுப்பதன் மூலமும், வெளிநாட்டு வங்கிகளின் செயல்பாடுகளை மட்டுப்படுத்துவதன் மூலமும் லீ உள்நாட்டு நிதியில் இறுக்கமான பிடியை வைத்திருந்தார். இதன் பொருள் சர்வதேச நிறுவனங்கள் சிறிய தீவு நாட்டில் தங்களை நிலைநிறுத்துவதற்கான வாய்ப்பைக் கண்டன. ஊழலற்ற சூழல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் இணைந்து சிறந்த நிதி மற்றும் பொருளாதாரக் கொள்கை பல பன்னாட்டு நிறுவனங்கள் சிங்கப்பூரை ஒரு பிராந்திய மையமாகத் தேர்ந்தெடுத்தன.

லீ திறந்த சுதந்திர வர்த்தகத்தை கையிலெடுத்து வெற்றியும் கண்டார். இது சிங்கப்பூர், பெரும் பன்னாட்டு நிறுவனங்களின் வெளிநாட்டு முதலீட்டை தாராளமாக ஈர்க்க உதவியது. மேலும் சிங்கப்பூரின் எழுச்சிக்கான ஒரு தெளிவான காரணி, உலகளாவிய நிதிய எழுச்சிகளை சீராகப் பயன்படுத்திக் கொள்ளும் லீயின் திறன் ஆகும். இது 1971 இல் அமெரிக்கா டொலரை தங்கப்பெறுமதியின் நிர்ணயத்திலிருந்து நீக்கியபோது தொடங்கியது. லீ இந்த வாய்ப்பை விரைவாகப் புரிந்துகொண்டு, சிங்கப்பூரை அந்நியச் செலாவணிக்கான பிராந்திய மையமாக நிறுவினார்.

உண்மையில், 1968 முதல், சிங்கப்பூர் அரசாங்கம் ஆசிய டாலர் சந்தையை வளர்ப்பதற்கு ஊக்கத்தொகை மற்றும் முன்னுரிமை வரி சலுகைகளை வழங்கியுள்ளது. இந்த முன்முயற்சியானது சிங்கப்பூர் ஒரு நிதி மையமாக வளர்ச்சியடையவும், அதன் அருகில் உள்ள போட்டியாளரான ஹொங்கொங்கை விட முன்னணியில் இருக்கவும் உதவியது.

அதேவேளை உள்நாட்டு உட்கட்டமைப்பு அபிவிருத்தியடையாமல் பொருளாதார, சமூக வளர்ச்சி சாத்தியமில்லை என்பதையும் லீ உணர்ந்திருந்தார். வீடமைப்பு உள்ளிட்ட உள்நாட்டு உட்கட்டமைப்பை சரியான வகையில் திட்டமிட்டு லீயின் அரசாங்கம் முன்னெடுத்தது. சேரிப்புறங்களை மாற்றி, உலகத்தரத்தில் திட்டமிடப்பட்ட நகரமயமாக்கலை சிங்கப்பூர் கண்டது!

லீ குவான் யூ மீதும், சிங்கப்பூர் மீதும் விமர்சனங்கள் இல்லாமல் இல்லை. சிங்கப்பூரில் ஜனநாயக இடைவெளி குறைவாக இருக்கிறது. பேச்சுச் சுதந்திரமில்லை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து முன்வைக்கப்பட்டுக்கொண்டேயிருக்கிறது. ஒரு பலமான எதிர்க்கட்சி கூட சிங்கப்பூரில் இல்லை எனலாம். சிங்கப்பூர் கண்ட அசுர வளர்ச்சியின் விலை அது என்று கூடச் சொல்வோரும் உண்டு. இந்தக் குறைகள் இருந்தாலும், இப்படி ஒரு தலைமை எங்கள் நாட்டுக்குக் கிடைக்கவில்லையே என பலரும் அங்கலாய்க்கும் ஒரு தெளிவான பார்வையும், தீர்க்க தரிசனமும் கொண்ட தலைமை சிங்கப்பூரிற்குக் கிடைத்துள்ளது.

சரி, இத்தகைய ஒரு தலைமையேனும் இலங்கைக்கு கிடைத்துள்ளதா என்றால் அது கேள்விக்குறியே! இலங்கையிலுள்ள எத்தனை அரசியல்வாதிகளுக்கு இலங்கை என்ற நாடு பற்றிய தீர்க்கதரிசனம் இருக்கிறது? இந்தக் கேள்வியை இலங்கை மக்கள் தமக்குத் தாமே கேட்டுக்கொள்வது அவசியம். இனவாதத்தால் எந்த நாடும் வளர்ந்ததில்லை என்பதுதான் வரலாறு. ஆனால் அந்த வரலாறு தெரிந்த, புரிந்த, பெரும் கல்வி கற்ற அரசியல்வாதிகள் கூட, அரசியலுக்காக இனவாதம் பேசிய நாடு இது. தேர்தல் வெற்றி, பதவி மோகம், ஆட்சி அதிகாரம் என்ற சின்ன வட்டத்துக்குள் வாழ்ந்துகொண்டு, நாட்டைச் சூறையாடி தமது வாழ்க்கையை எப்படி முன்னேற்றலாம் என்று சிந்திக்கும் அரசியல்வாதிகளையும், அவர்களுடைய அடிவருடிகளையும் கொண்ட நாடும், அவர்களை வாக்களித்து ஆதரிக்கும் மக்களும் உள்ளநாடு வங்குரோத்தானதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது. இங்குள்ளவர்கள் லீ குவான் யூ-வின் சர்வாதிகாரத்தை மட்டும் கையிலெடுக்க விரும்புகிறார்கள், மற்றவற்றை மறந்துவிடுகிறார்கள்.

இலங்கை அரசியலின் பெரும்குறை, இங்கு நாட்டையும் மக்களையும் நேசிக்கும், லீ குவான் யூ போன்ற தீர்க்கதரிசனமிக்க தலைமைகள் இல்லாமை!

## கடிதங்கள்

### கால்நடைகளின் உறைவிடம்

முல்லைத்தீவு நகரத்துக்கான பேருந்து நிலையம் கடந்து 2020 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட போதும் இதுவரை பயன்படுத்தப்படாத நிலையில் கால்நடைகளின் உறைவிடமாக காணப்படுகிறது

நகர அபிவிருத்தி நீர்வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்டது.

அதன் கட்டுமான பணிகள் முழுமையாக நிறைவுறுத்தப்படாத நிலையில் ஆரம்பகட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்ட கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 08 ஆம் பொதுமக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. எனினும், கடந்த மூன்று ஆண்டுகளாக பயன்படுத்த படாத நிலையில் காணப்படுகின்றது

அத்துடன் தற்போது கால்நடைகளின் உறைவிடமாகவும் காணப்படுகின்றது. குறித்த பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன வசதிகள் கொண்ட கடைத்தொகுதிகளும் இதுவரை திறந்து வைக்கப்படாமலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்ட மேற்படி பேருந்து நிலையத்தை பயன்படுத்தும் வகையில் மாற்றியமைத்து தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ்

# புதிய பிரதம நிறைவேற்று அதிகாரி



சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பிஎல்சி, அதன் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக இவோன் புரோஹியரை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. இடைக்கால பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும், பிரதம நிதி அதிகாரியாகவும் (CFO) செயலாற்றியிருந்த புரோஹியர், சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸின் முதல் பெண் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பொறுப்பேற்றுள்ளார்.

15 வருடங்களுக்கு மேலாக வியாபார தந்திரோபாயம், நிதி அறிக்கையிடல், தந்திரோபாய நிதி முகாமைத்துவம், செயன்முறை மேம்படுத்தல்கள், தகவல் கட்டமைப்புகள் மற்றும் விதிமுறை கணக்காய்வுகளை கையாளல் போன்றவற்றில் 15 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள புரோஹியர், நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் வெற்றிகரமான செயற்பாடு ஆகியவற்றுக்கு பெருமளவு அறிவு மற்றும் அனுபவத்தை சேர்த்துள்ளார்.

தமது புதிய பதவியில், சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் மூலோபாய நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்வதற்கு பொறுப்பானவராகவும், அணி மறுசீரமைப்பு மற்றும் வாடிக்கையாளர் மற்றும் பங்காளர்களுக்கு சிறந்த சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் டிஜிட்டல் ஆற்றல்களை மேம்படுத்தல் போன்றவற்றுக்கு பொறுப்பானவராக அமைந்திருப்பார். புத்தாக்கமான நிதித் தீர்வுகள் மற்றும் சேவைகளை வழங்கி, இதுவரை அணுகியிராத கடன் வழங்கல் சந்தைகளில் கவனம் செலுத்த நிறுவனம் ஆரம்பித்துள்ளது. அத்துடன், மீட்சிக்கான முன்னேற்பாடான மற்றும் துரித வழிமுறையையும் பின்பற்றுகின்றது.

சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பிஎல்சியின் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள இவோன் புரோஹர் கருத்துத் தெரிவிக்கையில், “சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸில் வளர்ச்சிக்கான புதிய யுகத்தில் காலடி பதித்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். எமது பங்காளர்களின் ஒப்பற்ற ஆதரவுடனும், எமது தாய் நிறுவனமான சொஃப்ட்லொஜிக் கெப்பிட்டலின் உறுதியான பின்புலத்துடனும், சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் நீண்ட கால உறுதித் தன்மையை எய்தும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். எமது திறன்களை மேம்படுத்திக் கொள்ளவும், நோக்க அடிப்படையிலான தந்திரோபாயங்களை நிறைவேற்றவும் அவற்றினூடாக நிலைபேறான மற்றும் இலாபகரமான வளர்ச்சியை எய்தவும் எதிர்பார்க்கின்றேன்.” என்றார்.

2020 ஆம் ஆண்டில் சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸின் பிரதம நிதி அதிகாரியாக தெரிவாகும் முன்னர், இலங்கையின் புகழ்பெற்ற நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் சிலதில் தலைமைத்துவ பதவிகளில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ளார். அபான்ஸ் ஃபினான்ஸ் பிஎல்சியின் இடைக்கால பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரி ஆகிய பதவிகளை வகித்திருந்ததுடன், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சியில் நிதி அறிக்கையிடல் மற்றும் கட்டுப்பாட்டு சிரேஷ்ட முகாமையாளர் மற்றும் AMW கெப்பிட்டல் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பிஎல்சியின் சிரேஷ்ட நிதி முகாமையாளராகவும் கடமையாற்றியிருந்தார். புரோஹர், இலங்கை பட்டைய கணக்காளர் நிறுவகனத்தின் நீண்ட கால அங்கத்தவராகவும், சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CMA) அங்கத்தவராகவும் திகழ்கின்றார். கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து MBA பட்டத்தையும், ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ BSc. விசேட பட்டத்தையும் கொண்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டின் நிதி வியாபார சட்ட இல. 42 இன் கீழ், பதிவு செய்யப்பட்ட நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பிஎல்சி அமைந்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் 2000 ஆம் ஆண்டின் நிதிக் குத்தகை சட்ட இல. 56 இன் கீழ் அங்கீகாரம் பெற்ற விசேடத்துவமான லீசிங் நிறுவனமாகவும் திகழ்கின்றது.

சிவனொளிபாதமலை யாத்திரிகர்களின் நிவாரணியாக

# ‘IODEX சுவசஹறன’

வலி நீக்கும் நிவாரணியான IODEX, அண்மையில் சிவனொளிபாத ஆலய வளாகத்தில் “IODEX சுவசஹறன” எனும் சமூகப் பொறுப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்திருந்தது. இதன் போது, சிவனொளிபாத மலைக்கு விஜயம் செய்திருந்த ஆயிரக் கணக்கான யாத்திரிகர்களின் வலிகளுக்கு நிவாரணத்தை வழங்கியிருந்தது.

”வலி உங்களுக்கு தடையாக அமைந்திட இடமளிக்காதீர்கள்” எனும் தொனிப்பொருளின் கீழ், ஆறு வருடங்களுக்கு முன்னதாக ஆரம்பமாகிய இந்த “IODEX சுவசஹறன“ எனும் சமூகப் பொறுப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம், அக்காலப்பகுதியினுள் நாட்டின் பல்வேறு சமய, கலாசார நிகழ்வுகளின் போது யாத்திரிகர்களுக்கு நிவாரணத்தை வழங்கும் வகையில் செயலாற்றியிருந்தது. இம்முறை சிவனொளிபாத யாத்திரைக்கு வருகை தந்திருந்த யாத்திரிகர்களின் தலைவலி, கழுத்து வலி, மூட்டு வலி மற்றும் இடுப்பு வலி போன்ற உடல்சார் வலிகளால், யாத்திரையை மேற்கொள்வதில் எழக்கூடிய இடையூறுகளை குறைத்து, மலைஉச்சிக்கு சென்று, வழிபாட்டைத் தொடரும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது “IODEX சுவசஹறன” சமூகப் பொறுப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாக அமைந்திருந்தது.

அதன் பிரகாரம், களைப்படைந்திருந்த யாத்திரிகர்களுக்கு, ஆலய வளாகத்தில் நிறுவப்பட்டிருந்த IODEX சுவசஹறன கூடத்தினுள் இலவசமாக கால்கள் மற்றும் தலை மசாஜ்களை வழங்கியது. மேலும், GSK நிறுவனத்தின் பிரதான வர்த்தக நாமங்களில் ஒன்றான பனடோல், யாத்திரிகர்களின் உடல்வலியை தணிப்பதற்கு பனடோல் மாத்திரைகளை இலவசமாக விநியோகித்திருந்தது.

மேலும், “IODEX சுவசஹறன”, சிவனொளிபாத மலைக்கு பயணிக்கும் யாத்ரீகர்களுக்கு, குறிப்பாக வயதானவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கு உதவ ஒரு சிறப்புக் குழுவை நியமித்தது. மேலும், இந்த அணியினால், சிவனொளிபாத யாத்திரையின் போது, காயங்களுக்கு உள்ளாகும் யாத்திரிகர்களுக்கு சிகிச்சைகளை வழங்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

GSK நிறுவனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுகள் செயற்பாடுகளுக்கான பொறுப்பதிகாரி சானக வன்னியாரச்சி கருத்துத் தெரிவிக்கையில், “கடந்த ஆறு வருட காலமாக நம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் சமய மற்றும் கலாசார நிகழ்வுகளில் சுவசஹறன வலி நிவாரணப் பகுதிகளை நிறுவி, பக்தர்களின் ஆன்மீக வாழ்க்கையை மேம்படுத்துவதில் பங்களிப்பு வழங்கி வருகின்றோம். மிஹிந்தலை, கதிர்காரம், நல்லூர் போன்ற பகுதிகளில் விசேடமாக வெசாக் மற்றும் பொசொன் போன்ற பண்டிகைக் காலப்பகுதியில் ஒன்றுதிரளும் ஆயிரக் கணக்கான பக்தர்களின் நலன் கருதி இந்த நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கின்றோம். இந்நாட்டின் முன்னணி வலி நிவாரணி வர்த்தக நாமத்தினால் இது போன்ற சமூகப் பொறுப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்க முடிந்துள்ளமை தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றேன்.” என்றார்.

சிவனொளிபாத நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்து, இந்த ஆண்டின் தமிழ்-சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில், பொசொன் பௌர்ணமி காலத்தில் மிஹிந்தலையிலும், ஆகஸ்ட் மாதம் இடம்பெறும் நல்லூர் ஆலய திருவிழாவிலும், அதனைத் தொடர்ந்து சகல பௌர்ணமி தினங்களிலும் மற்றும் விகாரைகளை அடிப்படையாகக் கொண்டு, கலாசார நிகழ்வுகளின் பிரகாரம், IODEX இனால் சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளது.




உத்தரப் பிரதேசம்

# நிழல் உலக தாதா சுட்டுக்கொலை



நிழல் உலக தாதாவும், முன்னாள் எம்.எல். ஏவுமான அத்திக் அகமது, அவரது சகோதரர் அஷ்ரப் அகமது கொல்லப்பட்டதை அடுத்து, உத்தரபிரதேசத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கை உறுதிசெய்யுமாறு பணித்துள்ள உ.பி. முதல்-மந்திரி யோகி ஆதியநாத், 3 பேர் கொண்ட உயர்மட்ட குழு விசாரணைக்கும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ் பொறுப்பின் கீழ் இருந்த இருவரும் மருத்துவமனைக்கு பொலிஸாரால் அழைத்து வரப்பட்டனர். இருவரது கையிலும் விலங்கு பூட்டப்பட்டு இருந்தது. பலத்த பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டு இருந்தது.

அந்த சமயத்தில் அவர்களிடம் செய்தி சேகரிக்க செய்தியாளர்கள் சூழ்ந்தனர். செய்தியாளர்களை போல மைக், கெமரா என கூட்டத்தோடு கூட்டமாக சம்பவ இடத்தில் இருந்த மூன்று பேர் திடீரென தங்கள் கையில் இருந்த துப்பாக்கியை கொண்டு இருவரையும் சுட்டனர்.

வழக்கறிஞர் உமேஷ் பால் கொலை தொடர்பாக பொலிஸ் பொறுப்பின் கீழ் இருவரும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர்தான் அவரது மகன் ஆசாத் அகமது என்கவுன்ட்டரில் கொல்லப்பட்டார். மகனின் இறுதிச் சடங்கில் கூட பங்கேற்க அத்திக் அகமதுவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நியூயோர்க்,

# நாயுடன் பாலியல் உறவு



ஆண் நாயுடன் தான் பாலியல் உறவில் ஈடுபட்டது ஏன்? என்பது தொடர்பில் 19 வயதான இளம் பெண் அளித்துள்ள விளக்கமானது பொலிஸாரை அதிர்ச்சியடைய செய்துள்ளது.

அமெரிக்காவில் இடம்பெற்ற இந்த பாலியல் உறவு தொடர்பிலான வீடியோ வைரலானது.


கிடைத்த தகவலுக்கு அமைய பொலிஸார் நடத்திய விசாரணைகளில், நாய்களுடன் பாலியல் உறவு கொண்டு அதனை வீடியோவாக பதிவும் செய்து அப்பெண் வைத்தள்ளார்.

நாயுடன் பாலியல் உறவில் இருப்பது தான் என்பதை அப்பெண் ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால், இதுபோன்று செய்யும்படி தன்னை அச்சுறுத்தினார்கள். அதற்காக பணம் கொடுத்தனர் என தன்னை தற்காத்து கொள்ளும் வகையில் பொலிஸில் தெரிவித்துள்ளார்.

விசாரணை நடத்திய பொலிஸ் அதிகார், தன்னுடைய 17 ஆண்டு கால காவல் பணியில், நான் விசாரித்ததிலேயே அதிக மனவருத்தம் ஏற்படுத்தும் விசயங்களில் இது ஒன்று என்றார்.

ஐ.பி.எல்:

# லக்னோவை வென்ற பஞ்சாப்



இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு  20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), லக்னோவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுடனான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட சுப்பர் ஜையன்ட்ஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், அணித்தலைவர் லோகேஷ் ராகுல் 74 (56) ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், சாம் கர்ரன் 4-0-31-3, ககிஸோ றபாடா 4-0-34-2, ஹர்பிறீட் பிறார் 2-0-10-1, அர்ஷ்டீப் சிங் 3-0-22-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 160 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் 19.3 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில், சிகண்டர் ராசா 57 (41), மத்தியூ ஷோர்ட் 34 (22), ஷாருக் கான் ஆட்டமிழக்காமல் 23 (10) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், யுட்ஹ்விர் சிங்ஹ் 3-0-19-2, மார்க் வூட் 4-0-35-2, ரவி பிஷ்னோய் 2.3-18-2, கிருஷ்ணப்பா கௌதம் 4-0-31-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக சிகண்டர் ராசா தெரிவானார்.

பெங்களூருவில் முன்னதாக நடைபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸுடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: டெல்லி

பெங்களூர்: 174/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: விராட் கோலி 50 (34), மஹிபால் லொம்ரோர் 26 (18), கிளென் மக்ஸ்வெல் 24 (14), பப் டு பிளெஸி 22 (16), ஷபாஸ் அஹ்மட் ஆ.இ 20 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: குல்டீப் யாதவ் 2/23 [4], லலித் யாதவ் 1/29 [4])

டெல்லி: 151/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மனிஷ் பாண்டே 50 (38), அன்றிச் நொர்கியா ஆ.இ 23 (14), டேவிட் வோர்னர் 19 (13), அமன் கான் 18 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: விஜயகுமார் வைஷாக் 3/20 [4], மொஹமட் சிராஜ் 2/23 [4], வெய்ன் பார்னல் 1/28 [4])

போட்டியின் நாயகன்: விராட் கோலி

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸை பெங்களூர் எதிர்கொள்ளவுள்ளது.

அம்பாறை மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்துக்கு

# புதிய நிர்வாகம் தெரிவு

நூருல் ஹுதா உமர்



அம்பாறை மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் 2023/2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டமும் 2023/2025ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும், இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் தலைவர் பாலித பெர்ணாண்டோவின் வேண்டுகோளுக்கிணங்கவும் அத்துடன் பூரண வழிகாட்டலுடன் இலங்கை மெய்வல்லுநர் சங்கப் பிரதிநிகளான வீ. மோகனகுமார், ஏ.ஏ.யு.பி. ரூபஸ்ரீ ஆகியோரின் பங்குபற்றுதலுடன் சாய்ந்தமருது தனியார் அண்மையில் விடுதியில் நடைபெற்றது.

15 பிரதேச செயலகங்கள், இலங்கை தென்கிழக்கு பல்கலைகழகம் ஆகிய 16 சங்க பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் இலங்கை மெய்வல்லுனர் சங்க பிரதிநிதியின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைவராக எஸ்.ஜி.வி.யு நாராயண ( மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்) , செயலாளராக அலியார் பைஸர் (உடற்கல்வி ஆசிரியர்) பொருளாளராக ஏ.எல்.எம். அஸ்ரப் (இலங்கை இராணுவம்) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ச்சியாக உப தலைவர்களாக எஸ். அரசரட்ணம் (ஓய்வுநிலை கல்வியதிகாரி), ஏ. சப்ரி நஸார் (மாவட்ட பயிற்றுவிப்பாளர்), ஐ.எல். எம். இப்ராஹிம் (ஆசிரிய ஆலோசகர்), ஜே. எம். உபசேனே (மாவட்ட பற்றுவிப்பாளர்), எஸ்.எம். பி. ஆசாத் ( Instructor Phy-Edu SEUSL), எம்.எம். அஸ்மி (உடற்கல்வி ஆசிரியர்), கே. கங்காதரன் (உதவி கல்வி பணிப்பாளர்) ஆகியோரும், உப செயலாளர்களாக ஐ.எம். கதாபி (நிர்வாகம்) (Instructor Phy-Edu SEUSL), எம். எச்.எம். அஸ்வத் (தொழில்நுட்பம்) (விளையாட்டு உத்தியோகத்தர்), உப பொருளாளராக எல். சுலக்ஸன் (விளையாட்டு உத்தியோகத்தர், கணக்கு பரிசோதகர்களாக எம்.எச். ஹம்மாத் (ஆசிரிய ஆலோசகர்), கே. சாரங்கன் (விளையாட்டு உத்தியோகத்தர்), ஊடக பொறுப்பாளராக எம். வை.எம்.றகீப் (உடற்கல்வி ஆசிரியர்) ஆகியோரும் சங்க அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்தின் போசகர்களாக இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தின் (AASL) தலைவர் பலித் பெர்ணான்டோ, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரும், சங்கத்தின் அலோசகர்களாக முன்னாள் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஏ. நபார், எம்.ஐ.எம். அமீர் அலியும் தெரிவு செய்யப்பட்டனர்.

8 வருட காலமாக இயங்காது மந்தகதியில் காணப்பட்ட மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்தை வினைத்திறனானதும், செயற்றிறன் உடையதுமாக மாற்றியமைக்க பல முன்மொழிவுகள் முன் மொழியப்பட்டன. இதில் முக்கிய அம்சமாக இவ்வருடத்திற்கான திட்டமாக மெய்வல்லுனர் வீரர்களுக்கான, மெய்வல்லுனர் பயிற்றுவிப்பாளர்களுக்கான, மெய்வல்லுநர் தொழில்நுட்பவியலாளர்களுக்கான செயற்திட்டங்கள் உருவாக்கப்பட்டு அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டதோடு, புதிய மெய்வல்லுநர் தொழில்நுட்பவியலாளர்களை உருவாக்கும் செயற்றிட்டமும், அதனை தொடர்ந்து மாவட்ட மெய்வல்லுநர் போட்டியும் நடாத்த தீர்மானிக்கப்பட்டது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 17 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.